செ.வெ.எண்:10 நாள்:04.03.2021

# சட்டமன்ற பொதுத் தேர்தல் - 2021
# தனி நபர்களுக்கு மதுபாட்டில்களை மொத்த கொள்முதல் பெறுவதை கட்டுப்படத்துவும் கண்காணிக்கவும் உத்தரவு.

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தகவல்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (04.03.2021) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் சட்ட விரோதமாக நடைபெறும் மது விற்பனை மற்றும் கடத்தல்களை தடுப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

**மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சட்டமன்ற தேர்தல்-2021 தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளபோது, சட்டவிரோதமாக மதுபாட்டில்கள் விற்பனை செய்தல், கடத்துதல், மொத்தமாக கொள்முதல் செய்து பதுக்கி வைத்தல், அரசு சில்லரை மதுபான கடைகளிலும், FL3 உரிமம் பெற்ற தனியார் ஓட்டல்கள் மற்றும் மதுக்கூடங்கள் போன்றவற்றில் தேர்தல் நடத்தை விதி அமலில் இருக்கும் போது அரசியல் கட்சி பிரமுகர்களுக்கு சாதகமாக மதுபான வகைகளை மொத்தமாக விற்பனை செய்வதை தடுக்கும் வகையிலும், அவற்றை கட்டுப்படுத்தும் வகையிலும் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மாநில எல்லையோரங்களில் சோதனை சாவடிகளில் வாகன சோதனைகளை கடுமையாக்கி மதுபானங்களை கடத்துவதை கட்டுப்படுத்துவதற்கும், சம்மந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் துறைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சட்ட விரோதமாக மது விற்பனை செய்தல் மற்றும் கடத்துதல் போன்ற செயல்கள் நடைபெறுவதை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், மதுபான கடைகளில் தினசரி விற்பனையை கண்காணிக்கவும், மற்றும் மதுபானம் தொடர்பான புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட அளவில் சிறப்பு பறக்கும்

படை அலுவலர்கள் நியமிக்கப்பட்டு உள்ளது. இப்பறக்கும் படையில் கிருஷ்ணகிரி டாஸ்மாக் கிடங்கு மேலாளர் திரு.பி.வெங்கடேசன் (9443910022) தலைமையில் திரு.கே.காளியப்பன் (9443967059), திரு.கே.நாச்சி (8248222098), திரு.டி.சரவணன் (9994146585), திரு.ஏ.சிவன் (9080745634), மற்றும் திரு.எஸ்.சத்தியநாராயணன் (9487046979) ஆகிய 5 நபர்களை இக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்கழு மாவட்டம் முழுவதும் தொடர்ந்து கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டு வரும்.

FL 3 உரிமம் பெற்றவர்கள் தங்களது நிறுவனங்களில் விதிமுறைகளுக்கு முரணாக மொத்த விற்பனை செய்வதை தவிர்க்க வேண்டும். கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர் கோட்ட ஆய அலுவலர்கள் எரி சாராயம் (Rectified Spirit) வாகன போக்குவரத்தை கடுமையான கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டு வந்து தணிக்கை செய்ய வேண்டும். தனி நபர்களுக்கு மதுபாட்டில்களை மொத்த கொள்முதல் பெறுவதை கட்டுப்படுத்துவும் கண்காணிக்கவும் அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் மதுபான கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற புகார்களை மேற்கண்ட தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.வி. ஜெயசந்திர பானுரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், உதவி ஆணையர் (ஆயம்) திரு.மு.ரவிச்சந்திரன், துணை காவல் கண்காணிப்பாளர் (மதுவிலக்கு அமல் பிரிவு) திரு.சங்கர், மாவட்ட மேலாளர் (டாஸ்மாக்) செல்வி கே.புஷ்பலதா, உட்பட FL3-பார் உரிமம் பெற்ற ஓட்டல் உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**